
திருவாசகம் - 37
பிடித்தபத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# பிடித்தபத்து கதை வடிவில்

## முத்திக்கலப்பு உரைத்தல்

## திருத்தோணிபுரத்தில் அருளியது

**உம்பர்கட்கரசே ஒழிவறநிறைந்த யோகமே ஊற்றையேன்**

**தனக்கு வம்பெனப் பழுத்தென் குடிமுழுதாண்டு வாழ்வற**

**வாழ்வித்த மருந்தே செம்பொருட் முணிவே சீருடைக கழலே**

**செல்வமே சிவபெருமானே எம்பொருட் டுன்னைச் சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 01**

அன்று சுந்தரமூர்த்தி சுவாமியார் மாணவர்களுக்கு உரையாற்றிக் கொண்டிருந்தார். ‘‘அன்பான சிவனின் மீது அன்பு கொண்ட மாணவர்களே, ஆசிரியர்களே அவர்களுடன் கூட வந்த சிவனடியார்களே, சிவனைப் பற்றிய பெருமைகளையும், அவனது திருவிளையாடல்களைப் பற்றியும் ஆச்சிரமத்தில் நானும் கற்ற சிவனடியார்களும் பேசி வருகிறோம். அதற்கு பலனிருக்கு. மாணிக்கவாசகசுவாமிகள் சொல்கிறார், ‘‘எங்கும் நிறைந்த பொருளான மகாதேவனே, எனது உலகின் மேலுள்ள பற்றுக்களை முற்றாக அழித்துச் சிவசொரூபமாக்கிய அமிர்தமே, உன்னை உறுதியாகப் பிடிக்கிறேன். உனது அருளை என்னுள் மேம்படுத்து’’ என்று கேட்கிறார். இவ்வாறு சிலர் தான் சிவனைக் கேட்கின்றனர். சிவனிடம் கேட்கக்கூடாதவற்றையெல்லாம் கேட்கின்றனர். அதற்குப் பதிலாகத் தாம் ஒரு பொருளைத் தருவதாக வேண்டுகின்றனர். கேட்கும் பொருள் கோடிக்கணக்கில் பெறுமதி உள்ளதாக இருக்கும். இவர்கள் கொடுக்கும் பொருள் சில ஆயிரம் ரூபா பெறுமதியானதாக இருக்கும். அவ்வாறு வேண்டாது சிவனது அருளை வேண்டுங்கள். அந்த அருள் உங்களுக்குத் தேவையேற்படும் போதெல்லாம் தானாக வந்து உதவி செய்யும். சிவன் அருளுவதில்லை. திருவருள் தான் குருவாகவும், பெற்றோராகவும், உறவினராகவும், நண்பராபகவும் வந்து உதவி செய்யும். ஒருமுறை ஒரு ஏழை மாணவன் உயர்கல்விக்குத் தெரிவானான். அவன் மிகவும் ஏழை. தந்தை காலமாகிவிட்டார். தாய் தோட்டங்களில் கூலி வேலை செய்பவள். அவனுக்கு மூன்று சகோதரிகள். அவன் வந்து கேட்டான், ‘‘சுவாமி சிவனை மகாதேவன் என்கிறீர்கள். அவன் எங்கும் இருப்பவன் என்றும் சொல்கிறீர்கள். அவனை நான் சந்திக்க வேண்டும். சந்தித்து எனது கல்விக்கு உதவும்படி கேட்க வேண்டும்’’ என்றான்.

“மகனே, சிவன் எங்கும் இருக்கிறார். அவர் உனது உள்ளத்தில் இருக்கிறார். நீ அலைந்து திரிந்து தேடத் தேவையில்லை. ஆச்சிரமத்தில் உள்ள சிவனுக்கு பூமாலை சூடி உனது குறைகளைச் சொல். அவர் உன்னை வந்து சந்திப்பார்’’ என்றேன். அதன் பின் நடராசன் என்ற மாணவன் தினமும் ஆச்சிரமத்துக்கு வந்து சிவனுக்கு மாலை சூடி வணங்குவான்.

“இவ்வாறு ஒரு மாதம் கழிந்தது. ஒரு நாள் நடராசன் வந்து சொன்னான்; “சுவாமி இன்று எனது வீட்டுக்கு கதிரேசன் தாத்தா சிவனை அழைத்து வந்தார். சிவன் சொன்னார்; “நடராசா உனது சிவபக்தி எனது மனதை நெகிழப் பண்ணியது. உனது கல்விச் செலவு முழுவதையும் நான் ஏற்கிறேன். நீ உன்னால் முடிந்தவரை படி. மாதாமாதம் கதிரேசனுக்குப் பணம் அனுப்புகிறேன் சென்று பெற்றுக்கொள் என்றவர்’’ என்றான். கதிரேசன் தான் அப்பணத்தைக் கொடுக்கிறார் இன்னொருவரின் பெயரைச்சொல்லி. அவன் சொன்னான்; “நீங்கள் தானே கூறினீர்கள் சிவன் உறவினர், நண்பர் உருவில் வந்து உதவுவார்’’ என்று அதனால் எனக்கு உதவுபவரை நான் சிவனாக நினைக்கிறேன்’’ என்றவன். உண்மையும் அதுதான். புராண காலத்தை எடுத்துப் பார்த்தால் சிவன் அரசர் மூலமும் சிவனடியார் மூலமும் உதவி செய்வித்திருக்கிறான். அத்துடன் தான் சிவனடியார் வேடந்தாங்கி வந்தும் உதவி செய்துள்ளதாகத் திருவிளையாடற் பராணத்தில் படித்தீர்கள்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**விடைவிடா துகந்த விண்ணவர் கோவே வினையனே**

**னுடையமெய்ப் பொருளே முடைவிடா தடியேன் மூத்தற**

**மண்ணாய் முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து கடைபடா வண்ணம்**

**காத்தெனை ஆண்ட கடவுளே கருணைமா கடலே இடைவிடா**

**துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 02**

“மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “இடப வாகனத்தை உடையவனே, தேவர்களின் அரசனே, எனது வினைகளை அழிக்க வந்த மெய்ப்பொருளே, துர்நாற்றம் வீசுகின்ற இந்த உடலை ஆட்கொண்ட கருணாகரனே, உன்னை நான் இறுக்கமாகப் பிடித்துள்ளேன். நீ எனக்குக் காட்சி தந்து உதவுவாயாக.” என்கிறார். மெய்யடியார்களான நாயன்மார்களும், ஞானிகளும், முனிவர்களும் சிவனிடம் தம்மைத் திருவடியில் சேர்த்துக் கொள்ளும்படி இரப்பர். அவர்கள் சிவனடியார்களுக்குத்

துன்பங்கள் வந்தால் அதை நீக்கும்படியும் வேண்டுவர். அவர்கள் சிவனை இறுகப் பற்றிப் பிடித்திருப்பர். தமது ஆத்ம விடுதலையை அவர்கள் நாடுவதோடு, சிவனடியார்களின் துன்பங்களையும் போக்குமாறு இரப்பர். அதனால் அவர்கள் எதிலும் பற்றில்லாதவர்களாவர். ஆனால் சாதாரண மக்கள் பற்றுள்ளவர்கள். பற்றில்லாவிட்டால் வாழ்வு கசக்கும். கடவுளின் மீது பற்று, குடும்பத்தின் மீது பற்று, நண்பர், அயலவர் மீது பற்று வையுங்கள் தீயவற்றை நினைக்காதீர்கள்; மாணவர்கள் ஒழுக்கத்தின் மீதும், கல்வியின் மீதும் பற்று வைத்தால் அவர்கள் கல்வியோடு சம்பந்தப்பட்டவர்கள் மீதும், மக்கள் மீதும் பற்றான அன்பை வைப்பர். நடராசன் கல்வியிலும், ஒழுக்கத்திலும் பற்று வைத்தமையால் எல்லோரும் அவனை விரும்பினர். அதனால் அவனுக்கு எந்தக் குறைகளும் இருக்கவில்லை” என்றார் சுவாமியார்.

**அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த**

**ஆரமுதே பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்**

**புழுத்தலைப் புலையனேன் தனக்குச் செம்மையே ஆய சிவபதம்**

**அளித்த செல்வமே சிவபெருமானே இம்மையே உன்னைச்**

**சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 03**

“நடராசன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான போது சொன்னான்; “சுவாமி நீங்கள் ஆச்சிரமத்தில் உரையாற்றுவது அனைத்தும் உண்மையானவை. சிவனை அன்புடன் தொழுதால் வெல்லமுடியாதவை என்று எவையும் இல்லை. நீங்கள் சொல்வீர்கள் மாணிக்கவாசக சுவாமிகள், “தாயும் தந்தையுமானவனே, வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஞானச்சுடரானவனே, சாகாத மருந்தானவனே, உடல் உணர்வை வளர்த்து வீண் காலம் போக்கும் புழுக்கள் மிகுந்த உடலைக் கொண்ட கீழானவனுக்கு அழியாத சிவபோகத்தைக் கொடுத்தருள். உன்னை உறுதியாகப் பற்றிப் பிடித்துள்ளேன். நீ என்முன் தோன்றி அருள் செய்வாயாக” என்று சிவனைப் பிரார்த்திக்கிறார். அதுபோல பிரார்த்தியுங்கள். ஞானிகள், மெய்யடியார்கள் சிவசொரூபத்தை வேண்டட்டும். நீங்கள் ஒழுக்கமாக வாழ்ந்து சிவனிடம் உங்கள் தேவைகளைச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு உதவி செய்வார்” என்றீர்கள். எமது வீட்டில் இருந்து பல்கலைக்கழகம் சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ளது. தினமும் பேரூந்தில் செல்ல முடியாது. எனக்கு ஒரு வாகனம் தேவையெனப் பிரார்த்தித்தேன். வெளிநாட்டில் இருந்து வந்த ஒரு சிவனடியார் சிவனைக் கோவிலில் வணங்கிக் கொண்டிருந்த என்னைக் கண்டு கதைத்தவர். அப்போது நல்லைநாதன் அண்ணை வந்து அவருடன் என்னைப் பற்றிக்

கதைத்தவர் அவர் எனக்கு ஒரு இருசக்கர வாகனம் வாங்கித் தருவதாகச் சொன்னவர். மறுநாள் வாங்கித் தந்தவர். எல்லாம் சிவனின் அருள்" என்றான்.

"பற்றில்லாத வணக்கம், ஒழுக்கமான பிராரத்தனை, பிறரை மதித்தல் என்பன எல்லோரையும் கவரச் செய்யும் சாதனங்கள். இதை அனைவரும் உணருதல் வேண்டும்" என்றார் சுவாமியார்.

**அருளுடைச் சுடரே அளிந்ததோர் கனியே பெருந்தழிறல் அருந்தவர்க்**

**கரசே பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே**

**யோகத்தின் பொலிவே தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த**

**செல்வமே சிவபெருமானே இருளிடத் துன்னைச் சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 04**

"சிவனடியார்களே மாணிக்கவாசக சுவாமிகள், சிவனைப் பற்றி இவ்வாறு சொல்கிறார்; "அருட்பெருஞ்சோதியே, ஞானப்பழமே, மெய்யடியார் மீது அளவில்லாத அன்பைக் கொண்டவனே, வர்ணிக்கமுடியாத இனிமையான அமுதம் போன்றவனே, யோக ஆருடனே, தெளிவடைந்த மெய்யடியார்களின் சிந்தையில் செல்வமாக வீற்றிருப்பவனே, இந்த மாயம் பொருந்திய உலகில் அக்ஞானத்தால் பீடிக்கப்பட்ட நான் உன்னை உறுதியாகப் பிடித்துள்ளேன். எழுந்தருளி வந்து என்னை ஆட்கொள்" என்கிறார்.

நடராசன் தினமும் ஆச்சிரமத்திற்கு வருவான். அவன் ஆச்சிரமத்திற்கு வந்தால் என்னுடன் கதைக்காமல் செல்லமாட்டான். அவன் சொன்னான்; "சுவாமி, நான் மிகவும் ஏழை, வசதிகள் இல்லாதவன். கதிரேசன் தாத்தாவின் அருளால் கற்கிறேன். நீங்கள் சொன்னது போல் நான் அனைவரையும் மதிக்கிறேன். சிவனை நாள்தோறும் வணங்குகிறேன். கல்வியில் அளவுக்கதிகமான அக்கறை கொண்டுள்ளேன். அடியார்கள் மீது அளவுக்கதிகமாக அன்பு வைத்திருக்கும் சிவன் என் மீதும் அன்பு வைத்துள்ளான். அதனால் விரிவுரையாளர்கள் அனைவரும் என்மீது அன்பும் மதிப்பும் வைத்திருக்கின்றனர். அதனால் நான் மிக்க மகிழ்வுடன் இருக்கிறேன். மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னவை அனைத்தும் உண்மை. உண்மையைத் தவிர வேறு எதையும் அவர் சொல்லவில்லை. தன் மீது அளவில்லாத அன்பு கொண்டவர்களுக்கு

அரசனானவன் என்றும், மெய்யடியார்களை என்றும், மகிழ்வில் ஆழ்த்துபவன் என்றும், ஞானவிளக்கென்றும், புகழ்ச்சியைக் கடந்த பற்றவனென்றும் மாணிக்கவாசகா் கூறுகிறார். அது உண்மையான கூற்று என்பதை எனது வாழ்வில் இருந்து புரிந்து கொண்டேன். யாரும் மதிக்காத ஏழைக்குடும்பத்தில் பிறந்த செல்லாக்காசைப் போன்ற என்னை இன்று மலையளவு உயர்த்தியுள்ளான். அதனால் பேரும் புகழும் வந்து சேர்ந்து எனது குடும்பப் புகழை அதிகரிக்கச் செய்துள்ளது" என்று உணர்ச்சிவசப்பட்டவன்' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற**

**ஒளியே மெய்ப்பதம் அறியா வீறிலியேற்கு விழுமிய**

**தனித்ததோர் அன்பே செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ**

**செல்வமே சிவபெருமானே எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 05**

"ஒப்புயர்வு இல்லாத ஒருவனே, எனது உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே, மெய்யுணர்வு இல்லாத கீழானவனான எனக்கு, மேன்மையளித்த அன்புடையவனே, சொற்களால் வர்ணித்துக் கூறமுடியாத வானில் உலவும் அழகனே, பலவீனமான நான் உன்னை இறுகப் பற்றிப் பிடித்தேன். எப்போது என்னை நீ ஆட்கொள்ளப் போகிறாய்?" என்று மாணிக்கவாசக சுவாமிகள் இறைவனை இரக்கிறார். சாதாரணமான மக்கள் இறைவனான சிவனைப் புகழ்ந்து தேவார திருவாசகங்களைப் பாடிவிட்டு பெரும் நிபந்தனைகளை வைக்கின்றனர் அவர்களது கோரிக்கைகள் பல. ஒன்றைக் கொடுத்தால் பத்தைக் கேட்பார்கள். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகள் பொன், பொருள், திரவியங்கள் எவையும் வேண்டாம். என்னை உன்னோடு சேர்த்து உனது திருவடி நிழலில் வாழவையென்று இரக்கிறார். இது அவரது பற்றில்லாத பக்தியைக் குறிக்கிறது. சுவாமி நீங்கள் அடிக்கடி பிரசங்கங்களில் கூறுவீர்கள் இறைவனை வணங்குங்கள். அவனுக்கு உங்களின் குறைகள், நிறைகள், தேவைகள் யாவும் புரியும். அதற்கமைய அவன் உங்களுக்கு அவற்றை வழங்குவான். நான் ளிநாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று ஒருவா் வணங்குகிறார். அவருக்கு வெளிநாட்டுக்குச் செல்லும் பலன் இல்லை. அதனால் போகமுடியாமை ஏற்படும். அதனால்தான் மனிதர் இறைவன் மீது கோபங் கொள்கின்றனர். என்னுடைய தகுதிக்கேற்ற வேலையை ஏற்பாடு செய்துதா என்று வணங்கினால் அது கிடைக்கும். அத்துடன் மகிழ்வும் பெருகும். கேட்கக் கூடாதவற்றைக் கேட்க வேண்டாம் என்பீர்கள் அதனால் நான் அப்படிச் சிவனைக் கேட்பதில்லை. எனது

மூத்த சகோதரிக்கு ஒரு கணவனைக் கொடு. முப்பது வயதாகியும் அவள் கன்னியாக இருக்கிறாள் என்று பிரார்த்தித்தேன். இப்பொழுது ஒரு வரன் வந்துள்ளார். அவர் கமக்காரர். அதுதான் அவளுக்குரிய வாழ்வு. அதை அவள் சிவனைப் பிரார்த்தித்து மேம்படுத்திக் கொள்ளட்டும். அவள் சிவனை இறுகப் பிடித்தாளேயானால் சிவன் அவளை முன்னேற்றுவான். அதை விடுத்து பொறியியலாளர், வைத்தியர், தேவையென்றால் அது நடக்குமா…..? என்று நடராசன் என்னைக் கேட்டவன்" என்றார் சுவாமியார்.

**அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்டு அளவிலா**

**ஆனந்த மருளிப் பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட**

**பிஞ்ஞகா பெரியஎம் பெருளே திறவிலே கண்ட காட்சியே**

**அடியேன் செல்வமே சிவபெருமானே இறவிலே உன்னைச்**

**சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 06**

நடராசா ஆச்சிரமத்தில் இருந்த சிவலிங்கத்திற்கு அழகான ஒரு மாலை கட்டி வந்து அதற்குச் சூடினான். தனது முன்னைய நிலையையும், இன்றைய நிலையையும், நினைத்துப் பார்க்க மனம் பொங்கியது. முன்பு அவனையோ, அவனது குடும்பத்தினரையோ யாரும் மதிப்பதில்லை. பெயரைச் சொல்லிக் கூட யாரும் அழைத்ததில்லை. 'டேய்' என்ற ஓர் அவமான அடிமைச் சொல்லை பெயருக்கு முன்னே வைத்து 'டேய் நடராசா' என்றே சிறு பிள்ளைகள் கூட அழைப்பர். அவ்வூரில் உள்ள பணக்கார வீடுகளில் இவனது தந்தை கூலி வேலை செய்வார். அவருக்குத் துணையாக அவனும் செல்வான். அதனால் பத்து ரூபாவாவது கூலியை விட மேலதிகமாகக் கிடைக்கும். அவ்வூரில் வாழும் கதிரைவேற்பிள்ளை பெரும் பணக்காரன். வருடத்தில் முன்னூறு நாட்கள் வரை அவனது தந்தை தனபாலசிங்கம் அங்கு வேலை செய்வார். கதிரைவேற்பிள்ளையின் மகள் அகல்யா நடராசனுடன் கற்பவள். சரியான திமிர் பிடித்தவள். நடராசனை எப்போதும் தரக்குறைவாகப் பேசுவாள். அதனால் அங்கு செய்ய நடராசனுக்கு விருப்பமில்லை. இருப்பினும் குடும்ப நிலை கருதி அவள் சொல்லும் அவமதிப்புக்களைப் பொறுத்துக் கொள்வான். பாடசாலையில் அவளது ஆதிக்கம் பலமாகவும் மோசமாகவும் இருக்கும். அதனால் அவன் துன்பப்படாத நாளே இல்லை.

"சிவனே, நான் பட்ட துன்பங்கள், அவமானங்கள் ஏராளம். இப்போ உன்னை வணங்கத் தொடங்கிய பின்பு மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல; "நீ ஆட்கொள்வதற்கு முன்பு அனாதையாகக் கிடந்தேன். என்னை நீ ஆட்கொண்டதோடு

மட்டும் நில்லாது எனது உள்ளத்தில் கோவில் கொண்டாய். அதனால் பேரின்பம் பெற்றேன். என்னை உன்னவனாக்கியமையால் எனது பிறவிப்பிணி அகன்றது. வெளிப்படையாக நான் உன்னைக் கண்டு கொண்டேன். அதனால் உன்னை நான் இறுகப்பற்றிப் பிடித்து விட்டேன். நீ எப்பொழுதும் எனது காட்சியில் இருப்பாயாக" என்கிறார். "நான் உன்னை வணங்கியதால் மேலானவனாகி விட்டேன். ஊரவர் மதிக்கின்றனர். பெரியவர்கள் மதிக்கின்றனர். எல்லாவற்றையும் விட அகல்யா எனக்குப் பெருமதிப்புத் தருகிறாள். இருங்கள், வாருங்கள், சாப்பிடுங்கள் என்கிறாள். முன்பு இரடா, சாப்பிடடா, வாடா, போடா என்றவளின் மாற்றத்தை என்னால் நம்பமுடியவில்லை. அதற்குக் காரணம் உன்னை நான் வணங்கத் தொடங்கியமையேயாகும். அதனால் இப்போ இறுக்கமாக உன்னை பற்றிப் பிடித்து விட்டேன்" என்று நினைத்தான் நடராசன்.

**பாசவே றறுக்கும் பழம்பொருள் தன்னைப் பற்றுமா றடியனேற்**

**கருளிப் பூசனை உகந்தென் சிந்தையுட் புகுந்து பூங்கழல்**

**காட்டிய பொருளே தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ**

**செல்வமே சிவபெருமானே ஈசனே உன்னைச் சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே. 07**

"சிவனே, திருவாசகத்தைப் பண்ணுடன் பாடிச் சுவாமியார் எளிய தமிழில் அதற்கு விளக்கமளித்தமையால் உன் மீது எனக்கு விருப்பமுண்டானது. அவ்விருப்பம் பெருகியபோது எனது வாழ்விலும் இன்பம் பெருகிறது. அவ் இன்பம் இப்போ நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மாணிக்கவாசகசுவாமிகள் சொல்வது போல; "பாசவேரை அறுக்கும் தொன்மையானவனே, உன்னை நான் பற்றும்படி அருள் செய்தாய். அதனால் உலகப்பற்று நீங்கியது. எனது ஆராதனைகளை ஏற்றாய். உனது தாமரைப்பூப்போன்ற திருவடிகளை எனக்குக் காட்டியருளினாய். சுடர்விளக்கே, ஞானப்பிரகாசமானவனே, எனது செல்வமான சிவபெருமானே, உன்னை உறுதியாகப் பற்றிப்பிடித்து விட்டேன். என்னை உன் மயமாக்கு" என்கிறார். அது மெய்யடியார்க்குச் சொன்னது. அதில் பொருத்தமானவற்றைச் சிவனடியார்கள் பின்பற்ற வேண்டும் என்று சுவாமியார் சொல்வார். அதனால் நான் உன்னைப் பற்றிப் பிடித்தேன். உன்னை மெய்யன்புடன் வணங்கினேன். எனது ஆராதனையை நீ முழுமனதுடன் ஏற்றாய். உனது தாமரைத் திருவடிகளை வணங்கிய பின்பு எனது வாழ்வு நாளுக்கு நாள் மேம்பட்டு வருகிறது. புகழ் அதிகரிக்கிறது. அதனால் உன்னை நான் மிகமிக இறுக்கமாகப் பற்றிப் பிடிக்கின்றேன். எனது சகோதரிக்கு வாழ்வளித்தது போல எனது குடும்பத்தை மேம்படுத்து" என்று பிரார்த்தித்தான் நடராசன். அவனது மனம் உருகக் கண்கள் கலங்கின.

**அத்தனே அண்டார் அண்டமாய் நின்ற ஆதியே யாதும்ஈ**

**றில்லாச் சித்தனே பத்தர்  சிக்கெனப் பிடித்த செல்வமே**

**சிவபெருமானே பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்துப்**

**பிழைத்தவை அல்லையாய் நிற்கும் எத்தனே உன்னைச்**

**சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.** **08**

கண்கள் கலங்க நடராசன் மெய்மறந்து நின்றான். தனது வாழ்வைத் தலைகீழாக மாற்றிய சிவனை நினைக்க உள்ளம் உருகியது. உணர்வுகள் பொங்கின; “கடவுளே, உலகின் முதல்வனே, பேரறிவாளனே, பக்தர்களுக்காகத் தன்னை அளிப்பவனே. சிவனடியார்களை மேம்படுத்துவதில் பித்தம் பூண்டவனே. எல்லா உயிர்களுக்குள்ளும் உறைந்து, அவற்றிற்கு உறுதுணையாக உள்ளவனே, மாயவித்தைக்காரனே, உன்னையே துணையென்று நம்பியுள்ள என்னை ஏற்றருள்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் உன்னை இரக்கின்றார். அவர் தனக்காக இரக்கவில்லை. எம்போன்ற நாதியற்றவர்களுக்காக இரக்கிறார். இதை உணர்ந்தவர்கள் தான் மேன்மை அடைவர். உணராதவர்கள் பித்துப் பிடித்தவர்போல உன்னைக் குறை சொல்வர். உண்மையில் நீ அன்பர்களுக்கு உய்விப்பதில் பித்துப்பிடித்தவனாக இருக்காவிட்டால் என்போன்ற யாரும் மதிக்காத அவர்களின் நிலை என்ன? நீ எல்லா உயிர்களினதும் உள்ளத்தில் கோவில் கொண்டிருப்பதால் அவற்றின் துன்பங்களையெல்லாம் மிகத் துல்லியமாக அறிந்து கொள்வதில் வல்லவன். ஒரு பெண் ஓர் ஆணை அவமதிப்பது என்பது அவனைச் சித்திரவதை செய்து கொலை செய்வதை ஒக்கும். மனிதாபிமானம் இல்லாது மிகமிக என்னைத் தாழ்த்தி அகல்யா அவமதிக்கும்போது இனி உயிர் வாழக்கூடாது என்ற நினைவு தான் எனக்கு வரும். அக்கொடிய நினைவுகளை நீக்கி என்னை நீ மகிழ்சிப்படுத்தியதால் தான் நான் உயிர் வாழ்கிறேன். அந்தளவில் நீ அன்பரை மகிழ்விப்பதில் பித்துக் கொண்டவன் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறியது முற்றிலும் உண்மையானது. அத்துடன் எனக்கு இப்போ எந்தக் குறைகளும் இல்லை. அதற்காக நான் என்வாழ்நாள் முழுவதும் உன்னைப் போற்றித் துதித்து வணங்குவேன்” என்று வாய்விட்டுச் சொன்னான் நடராசன்.

**பால்நினைத் தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்துநீ பாவியே**

**னுடைய ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா**

**ஆனந்த மாய தேனினைச் சொரிந்து புறம்புறம்திரிந்த**

**செல்வமே சிவபெருமானே யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.** **09**

மாணிக்கவாசக சுவாமிகளின் வார்த்தைகள் சிவனின் வார்த்தைகளை ஒக்கும். பெற்ற தாயைவிட அன்புள்ளவன் சிவன். அவன் உலகின் உயிர்கள் அனைத்திற்கும் தாயாக இருப்பதனால் பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டினான். மிகமிகக் கேவலமான பிறப்பு பற்றிப் பிறப்பு. அதற்கே பாலூட்டியவன் அவன். எனது தாயின் சகோதரனின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்கு எனது தாயின் சகோதரனான எனது மாமன் என்னை அவ்விழாவுக்கு கூட்டி வரக்கூடாது என்று அம்மாவுக்குச் சொன்னவர். அதை மறுக்காது எனது தாயார் மிகுந்த மகிழ்வுடன் அந் நிகழ்வுக்குச் சென்றவர். நான் அங்கு வந்தால் தனது மகளுக்கு முறை மாப்பிள்ளை என்று ஊர் கதைக்கும் என்பதால் தான் அவர் அவ்வாறு சொன்னவர். அம்மா அதையிட்டுப் பெரிதாகக் கவலை கொள்ளாது மிகுந்த மகிழ்வுடன் சென்று வந்தவர். அதற்குக் காரணம் அவர் இடைக்கிடை செய்யும் சிறிய உதவிகள் தான். செல்லாவிட்டால் கிடைக்காது என்ற நினைப்பு. ஆனால் சிவன் அப்படியானவன் அல்ல. பன்றிக்குட்டிகளை மதித்ததோடு, அதைவிடக் கேவலமான என்னை மதித்து மேலோன் ஆக்கியவன். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் தாயினும் மிக்க தயாளன் என்றவர். இப்போது நான் மேல்நிலையில் வந்தவுடன் வீட்டுக்கு வராத மாமாவும் மாமியும் அடிக்கடி வந்து சொந்தம் கொண்டாடுகின்றனர். அம்மாவுக்குத் தனது சகோதரனின் மகளான கறுப்புக்கரடியை எனக்குத் திருமணம் செய்ய நல்ல விருப்பம். இது தான் மனித உறவு. சிவன் அவ்வாறு செய்யமாட்டான்; “தாயிலும் பார்க்க அன்புள்ள தயாளனே, என் உடல் உணர்வை ஒடுக்கி அதில் பக்தியை வளர்த்து சிவானந்தத்தேனை எனக்கு ஊட்டினாய். நீ உலகாகப் பரந்த அண்ட வஸ்து. அதனால் எனது எண்ணங்களுக்கு அப்பாற்பட்டவன். உன்னை எனது உணர்வுகளால் தழுவுகிறேன். என்னைத் தயவுசெய்து நழுவவிடாதே” என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். எனது தாயைப்போல உலகில் பல தாய்மார்களைக் கண்ட நான், தாயினும் மேலான அன்பைத் தரும் உன்னை மட்டும் தான் கண்டேன். தற்போதைய பெற்றோர் தமது நலனுக்காகப் பிள்ளைகளை ஏலம்கூறி விற்கிறார்கள். அடியவர்களுக்கு அன்பை வழங்குவதில் பித்தனாக உள்ள நீ என்னை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டாய். அதனால் என்னைப் பொறுத்தவரை எனது தாயாரைவிட நீ மேலானவன்” என்று கண்கலங்கினான் நடராசன்.

**புன்புலால் யாக்கை புரைபுரை கனியப் பொன்னெடுங் கோயிலாப்**

**புகுந்தென் என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட ஈசனே**

**மாசிலா மணியே துன்பமே பிறப்பே இறப்போடு மயக்காந்**

**தொடக்கெலாம் அறுத்தநற்சோதி இன்பமே உன்னைச் சிக்கெனப்**

**பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.** **10**

தாயின் செயலை நினைக்க நடராசனுக்குப் பெரும் வேதனையாக இருந்தது. தனது பிள்ளைகள் எம்மோடு சேர்ந்தால் அவர்களின் தகுதி குறைந்துவிடும் என்பதாலும், தனது பெண்பிள்ளைகளில் இருவரில் ஒருத்தி தற்செயலாக என்னை விரும்பிவிட்டால் அவர்களது வாழ்வு பாழாகிவிடும் என்று நினைத்துத்தான் அவர் எமது குடும்பத்தை விலத்தித் தூரத்தில் வைத்திருந்தார். இப்போ நான் பல்கலைக்கழகத்தில் நன்றாகப் படிப்பதால் நான் அங்கு விரிவுரையாளராகி விடுவேன் என்று பேராசிரியர்கள் நம்புகின்றனர். அதனால் மாமா இப்போது அம்மாவைக் கைக்குள் போட்டுக் கொண்டு உறவாட வருகிறார். என்னுடனும் கதைக்க விரும்புகிறார். ஆனால் நான் கதைப்பதில்லை. மாமாவின் போலியான அன்பை உணராத அம்மா அவரைத் தடல்புடலாக வரவேற்கிறார். மாமாவின் பெண்பிள்ளைகள் இருவரும் நல்ல கரியநிறமுடையவர்கள். பேசிவரும் திருமணங்கள் எல்லாம் பெண்ணைப் பார்த்தவுடன் குழம்பி விடுகின்றன. அதனால் பெருங்கவலை அவருக்கு"

"மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் என்னை முழுமனிதனாக்கி விட்டது. அதனால் தான் சிவபக்தனாகச் சிவனுக்கு அடிமையாகிவிட்டேன். எனது புலால் உடம்பைப் பொற்கோவிலாக்கி அதனுள்ப் புகுந்து எனக்கு அருளிக் கொண்டேயிருக்கிறாய். இப்போது எனது உடல் முழுவதும் உனது உடமையாகிவிட்டது. அதனால் நீயும் எளிமையவனாகி விட்டாய் நீ மாசில்லாத முத்துமணி. எனது துன்பங்களை அகற்றிய புனிதச்சுடர். உன்னைப் பற்றிப் பிடித்த நான் ஒருபோதும் கைவிடமாட்டேன். நீ எப்பொழுதும் எனக்கே சொந்தமானவன்" என்ற மாணிக்கவாசகரின் வைராக்கியங்கள் என்னுள் பதிந்தமையால் நான் சிவனோடு ஐக்கியப்பட்டுவிட்டேன். அந்த ஐக்கியம் ஒருபோதும் மாறமாட்டாது. யார் எதைச் சொன்னாலும் கவலைப்பட மாட்டேன்" என்று நினைத்தான் நடராசன்.

*திருச்சிற்றம்பலம்.*